**றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டம் - 2021**

---

றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் தந்திரோபாய மற்றும் சமூக நிலைமையை முன்னேற்றுவதற்காக தெற்கு அதிவேக பாதை மற்றும் மத்திய அதிவேக பாதைக்கும் இடையில் புதிய அதிவேக பாதையை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் அண்ணளவாக ரூபா 286இ000 மில்லியனானதுடன் அமைச்சரவை அமைச்சானது திறைசேரியின் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு வங்கி முறைமையினால் நிதியளிக்க தீர்மானித்திருந்தது. மும்மொழியப்பட்ட அதிவேகப்பாதையானது 76.4 கி.மீ ஒட்டுமொத்த நீளத்துடன் கஹதுடுவ தொடக்கம் இங்கிரியாய மற்றும் ரத்னபுர ஊடாக பல்மடுல்ல வரை கடந்து செல்கின்றது. கஹதுடுவ இடமாறல் தொடக்கம் இங்கிரியாய வரையான அதிவேகப்பாதையின் 24.3 கி.மீ வின் சிவில் வேலைகள் 2021 ஜூன் 30 இல் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2022 மே 10 இல் ஒப்பந்ததாரரினால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கங்கள் தவிர்த்துஇ செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

--இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கான 2வது முற்பணகொடுப்பனவு மற்றும் இடைக்கால கொடுப்பனவு பத்திரம் இல. 3 மற்றும் 4 இற்காக ஒப்பந்ததாரரிற்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய செலுத்தவேண்டியவைகளின் கூட்டுமொத்த தொகையானது மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 4,161.77 | செயற்திட்டமானது 2022 ஆம் ஆண்டில் மேற்கூறிய ஐபிசிகளை கணக்கிட தேவையான ஏற்பாடுகள் செய்திருக்கும். | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சரியான பொறுப்புக்களை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தப்பொதி 01 இன் இடைக்கால கொடுப்பனவு பத்திரம் இல.02 இன் கீழாக கொள்வனவு செய்யப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் தளபாட மற்றும் உபகரணங்கள்இ அலுவலக உபகரணங்கள்இ கணணிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளின் உரிய தேய்மானம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் பதிவு செய்யப்படாமல் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 10.97 | செயற்திட்டமானது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான மேற்கூறிய சொத்துக்களை கணக்கிட தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கும் மேலும் 2021 ஆம் ஆண்டில் தாக்கம் செலுத்தும் தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகள் சீராக்கப்பட்டன. | தவறுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

றுவன்புர அதிவேகப்பாதை செயற்திட்டமானது 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும்இ கஹதுடுவ இடமாறல் தொடக்கம் பெல்மடுல்ல பிரிவு வரையான அதிவேகப்பாதையின் 73.9 கி.மீ களில் கஹதுடுவ இடமாறல் தொடக்கம் இங்கிரிய பிரிவு வரையான 24.3 கி.மீ கள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மானத்திற்காக கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கஹதுடுவ இடமாறலிற்கான 2 கி.மீ மற்றும் இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான 47.6 கி.மீகள் என்பனவற்றின் பெறுகை நடவடிக்கைகள் 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான வீதிப்பிரிவிற்கான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கைக்கான (ஈஐஏ) அனுமதி 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு கூட மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. எனவே கஹதுடுவ இடமாறல் தொடக்கம் இங்கிரிய பிரிவு வரையான இடைநிலை வீதிப்பிரிவின் நிர்மானமானது நாட்டிற்கு குறைந்தளவான முக்கியத்துவம் கொண்ட ஒன்றாக ஆகியிருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தகவல்களின் பிரகாரம்இ கஹதுடுவ இடமாறல் தொடக்கம் இங்கிரிய பிரிவு வரையான 24.3 கி.மீகளின் நிர்மான நடவடிக்கைகள் 04 வெவ்வேறான ஒப்பந்ததாரர்களிற்கு கையளிக்க ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் அனைத்து 04 பிரிவுகளின் நிர்மான நடவடிக்கைகள் நிர்மான கம்பனியினால் வழங்கப்பட்ட குறைந்த விலை மனுக்களை கருத்தில் கொண்டு ஒரு கம்பனியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு 04 பிரிவுகளிற்காக கம்பனியினால் வழங்கப்பட்ட 04 ஏலங்களின் பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டுடன் 14 சதவீதம் தொடக்கம் 22 வரையான சதவீதத்தினால் குறைவாக இருந்தும்இ 04 பிரிவுகளினதும் நிர்மான நடவடிக்கைகள் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகளை செலுத்த தவறியதன் காரணமாக ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 372 நாட்களின் பின்னர் 2022 மே 10 இல் ஒப்பந்ததாரரினால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 16.1 இன் பிரகாரம் ஜபிசி களின் கொடுப்பனவுகளின் தாமதம் காரணமாக ஒப்பந்ததாரர் வேலைகளை இடைநிறுத்த தகுதியுடையவர். வேலை இடைநிறுத்தலானது ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 372 நாட்களின் பின்னர் செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஜூலை 01 இலான அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் சிவில் நிர்மான வேலைகளிற்கான நிதியளிப்பு வசதிகள் நாட்டின் உள்நாட்டு வங்கிகளினூடாக ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அதிவேகப்பாதையின் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான பிரிவின் நிர்மான வேலைகள் 2021 ஜூன் 30 இல் ரூபா 54,695 மில்லியன் கிரயத்திற்காக கையளிக்கப்பட்டிருந்தும் ரூபா 16,200 மில்லியன் நிதிவசதிகள் மாத்திரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு உள்நாட்டு வங்கிகளினூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி மிகுதி நிர்மானக்கிரயம் ரூபா 38,495 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செயற்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்ததாரரின் மொத்த தீர்க்கப்படாத பொறுப்பு 2022 ஜூன் 30 இல் உள்ளவாறு ரூபா 5,410 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | இலங்கை வங்கியானது நாட்டில் தவிர்க்க முடியாத நிதி நெருக்கடி காரணமாக கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கு நிதியளித்திராததுடன் ஒப்பந்ததாரரிற்கான தீர்க்கப்படாத பொறுப்பு 2022 ஜூன் 30 இல் உள்ளவாறு ரூபா 5,410 மில்லியனாக விருந்தது. | ஒப்பந்தம் கையளிக்கப்பட முன்னர் நிதிவசதிகளினை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்திட்ட நோக்கத்திற்கு அப்பாற்பட்டு செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாக கூட்டுமொத்தம் ரூபா 1.8 மில்லியன் கிரயத்தில் 27 கையடக்க தொலைபேசிகள் மீளாய்வாண்டின் போது இடைக்காலக்கொடுப்பனவு பத்திரம் இல.03 இன் கீழ் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டமானது கோவிட் 19 நோய்த்தொற்று பரவல் காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனவே அனைத்து தள வேலைகளும் கூட மெய்நிகர் தளத்தின் இலத்திரனியல் ஊடகம் மற்றும் வாட்ஸ்அப் என்பன ஊடாக கண்கானிக்கப்பட்டது. எனவே 27 கையடக்கத்தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தகவல் சேகரிப்பு மற்றும் கண்கானிப்பு செயன்முறை என்பன ஆலோசகர் நியமிக்கப்பட்டிராததனால் செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இலக்கு மாற்றம் காரணமாக ஏற்படக்கூடிய ஏதாவது நட்டங்கள் உரிய தரப்பினர்களிடமிருந்து மீளப்பெறப்படல் வேண்டும். |

## 3.4 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| தகவல்களின் பிரகாரம்இ செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய மொத்த காணித்துண்டுகள் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான வீதி பிரிவிலுள்ள 615 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 2,439 காணித்துண்டுகளாகவிருந்தது. பிரிவு 38(அ) 2017–2018 ஆம் ஆண்டில் 2,060 காணித்துண்டுகளிற்காக வர்த்தமானியிடப்பட்டிருந்தும்இ ரூபா 222.24 மில்லியன் இழப்பீடு 422 காணித்துண்டுகளிற்கு மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் எவ்வித காணித்துண்டுகளும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணி சுவீகரிப்பு செயன்முறை நடைமுறையிலுள்ளது ரூ அனைத்து காணிகளும் இழப்பீட்டு செயன்முறை பூர்த்தியானதன் பின்னர் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்படும். | காணி சுவீகரிப்பு நடைமுறைகளை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |